தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

புரட்டாசி 6, பார்த்திப — திருவள்ளுவர் ஆண்டு 2036

2005 செப்டம்பர் 22, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது
தூக்கங் கடிந்து செயல்"

மனக் குழப்பமின்றித் தெளிவாக முடிவு செய்யப்பட்ட ஒரு செயலைத் தளர்ச்சியும், தாமதமும் இடையே ஏற்படாமல் விரைந்து நிறைவேற்ற வேண்டும்.

1. வினாக்கள்—விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள். வினா எண் 1, திரு. ப. ஆண்டிவேல், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.*

1—

அணை கட்டுதல்

***24429—திரு. ப. ஆண்டிவேல்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, ஆர். கோம்பை கிராமத்தில் குடகனாறு செல்லும் வறட்டாற்றின் குறுக்கே அணைக்கட்டு நிறுவப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2005 செப்டம்பர் 22

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) வேடசந்தூர் தொகுதியில் ஆர். கோம்பை முதல் குடகனாறு செல்லும் வறட்டாற்றின் குறுக்கே அணை கட்டுகிற திட்டம் அரசின் ஆய்வில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ப. ஆண்டிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணைக்கட்டுத் திட்டம் ஆய்வில் உள்ளது என்பதை அறிவித்தமைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அணைக்கட்டுத் திட்டமானது அரசு நிதியிழப்பு இல்லாமல் ஏற்படுத்த பழைய தோப்பூர் என்ற இடத்தில் அரசு நிலமும், ஆர். புதுக்கோட்டை என்ற இடத்தில் அரசு நிலமும் கூடுதலாக இருக்கின்றது. அந்த இடத்தில் விரைவாக அணை கட்டி முடித்துக்கொடுத்தால் குஜிலியம்பாறை ஒன்றிய விவசாயப் பெருமக்கள் பெரிதும் பயன் அடைவார்கள் என்பதை மீண்டும் ஒரு முறை வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் தொகுதியில் ஆர். கோம்பை கிராமத்தில் வறட்டாற்றின் குறுக்கே கண்மாய் அமைக்கும் இத்திட்டத்திற்கான மதிப்பீடு ரூபாய் 409 இலட்சம் ஆகும். இத்திட்டத்தின்மூலம் சுமார் 200 ஏக்கர் புன்செய் நிலங்கள் பாசன வசதி பெறும். இத்திட்டத்தைச் செயலாக்க 20.86 ஏக்கர் பட்டா புன்செய் நிலங்களையும், 11.95 ஏக்கர் புறம்போக்கு நிலங்களையும் கையகப்படுத்த வேண்டும். இந்நிலங்களைக் கையகப்படுத்த ரூபாய் 7.70 இலட்சம் தேவை என மதிப்பீடு செய்யப்பட்டிருக்கின்றது. இத்திட்டத்திற்கு ஒரு ஹெக்டேருக்கு ஆகும் செலவு ரூபாய் 3.80 இலட்சம் ஆகும். எனவே, இத்திட்டத்திற்கு நபார்டு வங்கியின் கடனுதவி பெற இயலாத நிலை தற்போது உள்ளது. நீர் வள ஆதாரத் தொகுப்புத் திட்டம்–2–ஐ மேற்கொள்ள உலக வங்கியிடமிருந்து நிதியுதவி பெறுவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்கு உலக வங்கியில் நிதி கிடைக்கப்பெற்றவுடன் இத்திட்டத்தின்கீழ் வறட்டாற்றின் குறுக்கே புதிய கண்மாய் அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

2005 செப்டம்பர் 22]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ப. ஆண்டிவேல்.

திரு. ப. ஆண்டிவேல்: மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கும், அமைச்சர் அவர்களுக்கும், பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைக் கூறி அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வை. சிவபுண்ணியம், இது குடகனாறு, குடமுருட்டி இல்லை.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணைக்கட்டு திட்டம் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். தமிழகத்திலே வேறு புதிய அணைக்கட்டுகள் கட்டுவதற்கான முயற்சிகள் அரசினால் மேற்கொள்ளப்படவிருக்கிறதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தனிக் கேள்வி போடவும், வினா எண் 2, திருமதி எஸ். ராஜம்மாள், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

2—

பக்கிள் ஓடைத் திட்டம்

***74295—திருமதி எஸ். ராஜம்மாள்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி தொகுதி, தூத்துக்குடியில் பக்கிள் ஓடை தூர் வாரும் திட்டம் உடனடியாக நிறைவேற்றப்படுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி நகராட்சி பொறுப்பில் உள்ள பக்கிள் ஓடை தூர் வாரும் திட்டத்தினை நிறைவேற்றிட விரிவான மதிப்பீடு தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.